## In the Court of the Judicial Magistrate No.II, Kovilpatti

## Deposition of Witness

C.C. 56 /2015

PW- 6 25-04-2025

| | |
|---|---|
| Name | சரவணக்குமார் |
| Father's/Husband's Name | அம்மமுத்துராஜ் |
| Village | ராஜிவ்நகர் |
| Taluk | கோவில்பட்டி |
| Caste | – |
| Calling | பிரிண்டிங் |
| Religion | – |
| Age | 44 |

(Accused absent. Petition filed and allowed)

<u>முதல்விசாரணை</u>

1) நான் கோவில்பட்டியில் வசிக்கிறேன். 08.01.2015ம் தேதி சோலைமுத்துராஜா மற்றும் அவரது தங்கை சரண்யா ஆகியோர் எனது அக்கா கடையான கூல்டிரிங்ஸ் கடைக்கு வந்தார்கள். அவசரமாக பணம் தேவைப்படுகிறது என்று என்னிடம் பணம் கேட்டார்கள். பாண்டியன் கிராம வங்கிக்கு சென்றதாகவும் அங்கு நகைக்குரிய அப்ரைசர் இல்லாததால் அங்கு அடகு வைத்து பணம் பெறமுடியவில்லை என்றும் அதனால் என்னிடம் நகையை கொடுத்து அடமானம் வைத்து பணம் வாங்கிதரச்சொன்னார்கள். நான் கோவில்பட்டி சத்தியபாமா தியேட்டர் அருகில் உள்ள முத்தூட் பைனான்ஸ் மைய கிளையில் நகைகளை அடகு வைத்து பணம் 1,37,000/– ரூபாய் வாங்கி கொடுத்தேன்.

2) அவருடைய தங்கையை எனது உறவினர் மகனுக்கு தான் திருமணம் செய்து கொடுத்திருந்ததால் அந்த நம்பிக்கையின் அடிப்படையில் நகைகளை அடமானம்

வைத்து கொடுத்தேன். பின்பு கோவில்பட்டி மேற்கு காவல்நிலையத்தில் இருந்து ஒரு மாதத்தில் எனக்கு போன் வந்தது.

3) பின்பு போலிசார் என்னை விசாரித்தார்கள். நடந்ததை சொன்னேன். போலிசார் என்னிடம் நான் அடகு வைத்த நகைகள் சோலைமுத்துராஜாவிற்கோ அவரது தங்கைக்கோ பாத்தியப்பட்டதல்ல என்று கூறினார்கள். அந்த நகை அவர்களுக்குரியதல்ல என்பதாலும் நான் தான் அடகு வைத்து கொடுத்தேன் என்பதாலும் நகைகளை திருப்பி கொடுக்க வேண்டும் என்று கூறினார்கள் எனவே நகைகளை அடமானம் வைத்ததை வட்டியுடன் பணத்தை கொடுத்து திருப்பினேன். நகைகளை சிரமப்பட்டு திருப்பி கொடுத்தேன். அதன்பின்பு எந்த தொடர்பும் இல்லை. போலிசார் வழக்கு சம்மந்தமாக விசாரணை செய்தார்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

**( எதிரி தரப்பிற்கு சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பளிக்கப்பட்டது கற்றறிந்த எதிரி தரப்பு வழக்கறிஞர் குறுக்கு விசாரணை இல்லை என்று கூறினார்)**

.

என்னால் நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு
தட்டச்சு செய்யப்பட்டு / எழுதப்பட்டு
சாட்சிக்கு / எதிரிக்கு படித்து காண்பிக்கப்பட்டு
அவரால் சரி என்று ஒப்புக்கொண்டு என் முன்
கையெழுத்து செய்தார்.

(ஒம்),B.பீட்டர்,
நீதித்துறை நடுவர் எண்.2,
கோவில்பட்டி.